மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 27 சனிக்கிழமை 12.08.2023 அதிர்வு 12

## மட்டு பாலமீன்மடு பஸ் தரிப்பிடத்தில் ஆணின் சடலம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடுஆரம்ப வைத்தியசாலை வளாக

03 ▶

# தமிழ் அரசியல் ஒட்டுண்ணிகள்தான் '13'ஐ குழப்புவதற்கு முயல்கின்றனர்

## அமைச்சர் டக்ளஸ் சீற்றம்



கொழும்பு,ஓகஸ்ட்12

"13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும், தமிழ் அரசியல் ஒட்டுண்ணிகள் தமது சுயலாப அரசியலுக்காக நம்பிக்கையீனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர். வரலாற்று தவறு ஒன்றை இன்னுமொருமுறை செய்யாது, கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு அனைவரும் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்." - இவ்வாறு கோரியிருக்கின்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா .

04 ▶

## அ'புரத்தில் நேற்றிரவு ஒருவர் சுட்டுக்கொலை

அநுராதபுரத்தில் இனந்தெரியாத நபர்களால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம், கெக்கிராவை பிரதேசத்தில் நேற்று இரவு 8.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

03 ▶

## நீர்கொழும்பில் சூடு இளைஞர் படுகாயம்

நீர்கொழும்பு, லெல்லம பிரதேசத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதில் அவர் படுகாயமடைந்ததார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

03 ▶

## கல்வியங்காட்டில் குடும்பஸ்தர் காயங்களுடன் சடலமாக மீட்பு



யாழ்.கல்வியங்காடு ஜி.பி.எஸ். விளையாட்டரங்கு வீதிக்கு அருகில் உள்ள வீடொன்றில் 54 வயதான குடும்பஸ்தர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

## எங்கள் மலையகத் தமிழ் மக்களுக்காக தோளோடு தோள் நின்று போராடுவோம்!

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் பிரதிக்ஞை




"எங்கள் மலையகத் தமிழ் மக்கள் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள் என்றும் தொடர்ந்து போராடுவோம். எங்கள் தமிழ் மக்களின் உரிமையை

03 ▶

## நிலாவெளியில் விகாரை கட்டும் பணி உடன் நிறுத்துமாறு ஆளுநர் உத்தரவு

திருகோணமலை நிலாவெளி பெரியகுளம் பகுதியில் பௌத்த விகாரை ஒன்றைக் கட்டும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அந்த நிர்மாணப்பணிகளால் இனமுறுகல்கள் ஏற்படும் எனக் கருதி அந்த நிர்மாணப் பணிகள் ஆளுநரின் உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டுள்ளன.

03 ▶

## நிலாவெளி வீதியை வழிமறித்து பிக்குகள் இன்று ஆர்ப்பாட்டம்



திருகோணமலை – நிலாவெளி பிரதான வீதியை மறித்து பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

04 ▶

## 13 வயதுடைய வாகரை சிறுமிகள் நால்வர் வாழைச்சேனை சுங்காங்கேணியில் மீட்பு

### 17 வயதுடைய சிறுவர்கள் இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாகரையில் பாடசாலை ஒன்றில் இல்லவிளையாட்டு போட்டிக்கு என வீட்டைவிட்டு கடந்த வியாழக்கிழமை சென்று காணாமல் போன 13 வயதுடைய நான்கு சிறுமிகளை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சுங்காங்கேணி

04 ▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# இலங்கை வரலாற்றை ஆராய்ந்தால் பல்வேறு பிரச்சினைகளைத் தீரக்க முடியும்

## சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு



இலங்கையில் வரலாற்றை முழுமை யான ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தீர்த்துக் கொள்ள முடி யும். ஆனால் குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படும்போது அது அர சியல் இலாபங்களுக்காகவோ அல்லது அரசியல் தலையீடுகளுடனோ முன் னெடுக்கப்படக் கூடாது.

நாடாளுமன்ற சிறப்புரிமையை ஆட்சியாளர்கள் தங்களுக்கு தேவை யான முறையில் பயன்படுத்துகிறார்கள் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கி யன் தெரிவித்துள்ளார்.

நேற்று (11) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாடாளுமன்றத்தைக் கூட அரசு தமது தேவைக்காகப் பயன்படுத்துகி றதா என்ற சந்தேகம் எமக்கு தற்போது எழுகின்றது. நாடாளுமன்ற சிறப்புரி மையை கூட இன்று ஆட்சியாளர்கள் தமது தேவைகளுக்காக பயன்படுத்து கின்றனர்.

அண்மைக்காலச் செயற்பாடுகளை அவதானித்தால் நாட்டின் நீதிமன் றங்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் குழப்ப நிலையை ஏற் படுத்துவதற்கு ஜனாதிபதி முயற்சிக் கின்றார் என்பது தெளிவாகத் தெரி கின்றது.

தேர்தலுக்கான நிதியை விடுவிக் காமல் தனது நிறைவேற்று அதிகாரத் தைப் பயன்படுத்தித் தடுப்பது போன்ற விடயங்கள் நாடாளுமன்ற உறுப் பினர்களின் சிறப்புரிமைகளை மீறும் செயலாகும்.

எனவே இந்த விடயத்தில் ஜனாதிபதி தான் விரும்பும் நேரத்தில் நாடாளு மன்றத்தில் இருக்கும் தனது கையாள் களை வைத்து சிறப்புரிமைகளை எழுப்பி இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்துகின்றார். எனவே எதிர்காலத் தில் இவ்வாறான நிலைமைகள் தொடர்பாக நாம் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அத்துடன் இலங்கையில் வர லாற்றை முழுமையான ஆய்வுக்குட் படுத்துவதன் மூலம் பல்வேறு பிரச்சினை களுக்கான தீர்வுகளை தீர்த்துக் கொள்ள முடியும்.ஆனால் குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படும்போது அது அரசி யல் இலாபங்களுக்காகவோ அல்லது அரசியல் தலையீடுகளுடனோ முன்னெ டுக்கப்படக் கூடாது.

ஏனெனில் இந்த விடயத்தில் சமூகங் களுக்கு இடையில் பல பிரச்சினை களும் உருவாகக் கூடிய நிலைமையும் காணப்படும். எனவே இந்த விடயத்தில் நாம் தெளிவான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த ஆய்வு குறித்த செயற்பாடு களில் எமது நாட்டிலுள்ள துறை சார்ந்த நிபுணர்களையும் உள்வாங்க வேண்டும்.– என்றார்.

# 60 மாணவர்களுக்கு கல்விக் கொடுப்பனவு









(மன்னார் நிருபர்)

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கம் கத்தோலிக்க ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் மன்னார் மாவட் டத்தில் தெரிவு செய்யப்பட்ட வறிய மாணவர்களுக்கு கல்விக் கொடுப்பனவு மற்றும் உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை(12) காலை 9.30 மணியளவில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் தலைவர் அருட்தந்தை தி.நவரெட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தி னராக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் எஸ்.சந்தியோகு கலந்து கொண்டார்.

இதன் போது மன்னார் மாவட்டத் தில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவ மாணவிகளுக்கு கல்விக் கொடுப்பனவு மற்றும் உலர் உணவுப் பொதி வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் செயலாளர் எஸ்.ஏ.ராதா பெர்னாண்டோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**எங்கள் மலையக ...**

வென்றெடுக்கும் வரை நாம் தோளோடு தோள் நின்று களமாடுவோம்." – இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

'மலையகத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க கைகோர்ப்போம்!' – என்ற தலைப்பிலான அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

எங்கள் மலையக தமிழ் மக்களின் 200 வருட வரலாற்றை நினைவு கூரும் வகையில் இந்த வருடம் முழுவதும் பல்வேறு தரப்பினரால் பல நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன. 200 வருட நிகழ்வுகள் வெறுமனே நிகழ்வுகளாக முடிந்துவிடாமல் மலையக தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தை அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்துகிறோம்.

1980களின் பின் அவர்களுக்கான குடியுரிமை படிப்படியாக வழங்கப்பட்டதன் பின்னரே இச்சமூகத்தில் சில மாற்றங்கள் உருவாகின. தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் எத்தனையோ வறுமை, சமூக நெருக்கடி, துன்பங்களின் மத்தியிலும் கல்வியில் முன்னிலை வகிக்கின்றனர். அதற்கு சான்றாக எமது பல்கலைக்கழகத்தில் மலையக தமிழ் மாணவர்கள் அனைத்துத் துறைகளிலும் மிளிர்ந்து வருகின்றார்கள். படிப்படியாக அவர்கள் தமது சுய முயற்சியிலேயே முன்னேறி வந்துள்ளார்கள்.

ஆனால் தேசிய ரீதியான வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இன்று வரை அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. கடந்த 200 வருடத்தில் அடைந்தவை சில, அடைய வேண்டியவை பல என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இருப்பினும் 200 வருட வரலாற்றை நினைவு கூரும் இந்த வருடத்தில் எம் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சர்வதேசத்திலும் அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்திலும் பேசுபொருளாக உள்ளன. அந்த முன்னேற்றத்தை மலையகத் தமிழ் மக்களின் நிரந்தர தீர்வுக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை பற்றிப் பேசும்போது எங்கள் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அடையாள மற்றும் சுயநிர்ணயம் பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

எங்கள் மலையகத் தமிழ் மக்கள் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள் என்றும் தொடர்ந்து போராடுவோம். எங்கள் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் வரை நாம் தோளோடு தோள் நின்று களமாடுவோம்.

**அ'புரத்தில் ...**

கெக்கிராவை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆர்.டி.சஞ்சீவ என்ற 41 வயதுடைய நபரே துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

சிகை அலங்கார உரிமையாளரான இந்த நபர், நேற்று இரவு வேலை முடிந்து வீட்டுக்கு வந்துள்ளார்.

அவ்வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர், வீட்டுக்குள் புகுந்து அவரைச் சுட்டுப் படுகொலை செய்துவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

**நீர்கொழும்பில் ...**

காயமடைந்த இளைஞர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்த இளைஞர் பிட்டபன பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பில் துங்கல்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**நிலாவெளியில் ...**

நிலாவெளி பெரியகுளம் பகுதியில் ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்களும் இரு சிங்களக் குடும்பங்களும் வசித்து வருகின்றன. அங்கு வாழும் தமிழ் மக்கள் இவ்விகாரை நிர்மாண பணிகள் ஆரம்பிக்க இருப்பதை நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் விகாரை நிர்மாணப் பணி தொடருமாக இருந்தால் இப்பிரதேசத்தில் பெரும் இனமுறுகல் நிலை ஏற்படும். ஆகையினால், கிழக்கு மாகாணத்தில் அனைத்து இன மக்களின் நலன்களை பேணும் ஆளுநர் என்ற அடிப்படையில் இனங்களுக்கிடையில் இனமுறுகல் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் முகமாக ஆரம்பிக்க இருந்த விகாரையின் நிர்மாணப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

**மட்டு, பாலன்மடு ...**

பகுதியிலுள்ள பஸ் தரிப்பிடக் கட்டடத்தில் ஆண் ஒருவர் இன்று சனிக்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று பிற்பகல் 2 மணியளவில் ஆண் ஒருவர் சடலமாக கிடப்பதைக் கண்டு அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

இறந்த நபர் மைக்கல் என்று அழைக்கப்படுபவர். இவர் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இந்தப் பகுதி பொதுக் கட்டடங்களான சந்தை மற்றும் பஸ்தரிப்பிடங்களில் தங்கி வாழ்ந்து வந்தவர். இவர் தொடர்பான மேலதிக விவரங்கள் தெரியவில்லை எனப் பொலிஸார் கூறினர்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கையை தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

**கல்வியங்காட்டில் ...**

உயிரிழந்த குடும்பஸ்தரின் மனைவி நேற்றையதினம் திருமணச் சடங்கிற்கு சென்றவேளை குடும்பஸ்தர் தனிமையாக வீட்டில் இருந்த நிலையில்இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்தாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை உறவினரொருவர் இவர்களது வீட்டிற்கு சென்று பார்த்த போது குடும்பஸ்தர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்துள்ளார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுவதாகவும் இதனால் இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

கணபதிப்பிள்ளை மகேந்திரன் என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்தில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா மற்றும் சட்ட வைத்திய அதிகாரி மயூரன் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தமிழ் அரசியல் ...**

'தமிழ் மக்கள் இந்த நாட்டிலே கௌரவமாக வாழ்வதை உறுதிப்படுத்துவது மற்றும் அனைத்து வகையான உரிமைகளுக்கும் உரித்துடையவர்களாக்குவது போன்ற எதிர்பார்ப்புக்களுடன் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தவர்களுள் ஒருவன் என்ற அடிப்படையில், தற்போது உருவாகியுள்ள சூழலை முன்நகர்த்துவதற்கு அனைத்துத் தமிழ் தரப்புக்களும் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறேன்" – எனஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய நாடாளுமன்ற உரை மற்றும் அதுதொடர்பாக பல்வேறு தமிழ் தரப்புக்களும் வெளியிட்டு வருகின்ற வியாக்கியானங்கள் குறித்து இன்று கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையின் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் மற்றும் அதனை செழுமைப் படுத்துவதற்கான சில பரிந்துரைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தூள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டம் என்பது எமது அரசமைப்பில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டிருக்கின்ற விடயம். தமிழ் தரப்புக்களின் தவறான அணுகுமுறை காரணமாகவே இதனை ஜனாதிபதி மீண்டும் நாடாளுமன்றிற்குக் கொண்டு வந்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் உருவாக்கம் மற்றும் அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டமை போன்றவை சாதாரணமாக நிகழ்ந்ததவை அல்ல. தமிழ் மக்கள் மத்தியில் உருவாகிய ஆயுத ரீதியான விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் அதில் பங்கு இருக்கின்றது. ஆயுதப் போராட்ட அமைப்புக்களில் தம்மை இணைத்துக் கொண்ட ஒவ்வொருவரின் அர்ப்பணிப்புகளின் பயனாக உருவாகியதே இந்த 13 ஆவது திருத்தச் சட்டம். இதில் எமது மக்களுக்கு இருக்கின்ற தார்மீக உரிமையையும் புறந்தள்ளி விடமுடியாது.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவனாக 13ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதன் பெறுமதியையும் என்னால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

அதேபோன்று, ஆயுதப் போராட்டத்தில் பங்கெடுத்துத் தம்மை அர்ப்பணித்தவர்களும், ஆயுதப் போராட்டாத்திற்கான ஆத்மார்த்தமான ஆதரவை வழங்கியவர்களும் இதனைப் புரிந்து கொண்டிருப்பதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இப்போது 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான நம்பிக்கையீனங்களை வெளியிடுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் ஒட்டுண்ணிகளாகவே இருக்கின்றனர். அதாவது, திருத்தச் சட்டத்திற்காக எந்தவிதமான பங்களிப்பையும் வழங்காது, நெருக்கடியான கால கட்டங்களில் பாதுகாப்பான சுயவாழ்வியலை உறுதிப்படுத்தியவர்களாகவும், அவ்வாறானவர்களின் வாரிசுகளாகவுமே இருக்கின்றனர்.

இப்போது நாடாளுமன்றத்தில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றவர்களை எடுத்துக் கொண்டால. கூட, என்னைத் தவிர நான்கு உறுப்பினர்கள் மாத்திரமே தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்களாக இருக்கின்றனர்.

ஏனையவர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டம் மற்றும் அந்தப் போராட்டம் இலங்கை – இந்திய உடன்படிக்கைக்கு பின்னர் தவறான திசையில் முன்னெடுக்கப் பட்டதால் ஏற்பட்ட அவலங்கள் ஆகிய வற்றை வைத்து அரசியல் செய்யும் ஒட்டுண்ணிகளாகவே இருக்கின்றனர்.

இவ்வாறான அரசியல் ஒட்டுண்ணிகளே, தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும், தமது சுயலாப அரசியலுக்காக நம்பிக்கையீனங்களை வெளிப் படுத்தி வருகின்றனர்.

ஆனால், வரலாற்று தவறு ஒன்றினை இன்னுமொருமுறை செய்யாது, கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தமிழ் மக்களின் அபிலாசைளை வென்றெடுப்பதற்கு அனைவரும் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது." – என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

**13 வயதுடைய ...**

பிரதேசத்திலுள் வீடு ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை தாங்கள் மீட்டமையுடன் 17 வயதுடைய இரு சிறுவர்களை கைது செய்துள்ளனர் என வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுடைய 4 சிறுமிகள் கடந்த வியாழக்கிழமை அந்த பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெறும் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு செல்கின்றனர் எனக் கூறி வீட்டை விட்டு வெளியேறிச் சென்று இரவாகியும் வீடு திரும்பாத தையடுத்து பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்பெஸ்டர் கிருபாகரன் தலைமையிலான பொலிஸார் விசாரணை மேற் கொண்டுவந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை வாழைச்சேனை சுங்காங்கேணி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 4 சிறுமிகளும் மீட்கப்பட்டனர். 17வயதுடைய இரு சிறுவர்களை பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்தச் சிறுமிகள் வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்றுவருகின்றனர். 4 நண்பிகளும் சம்பவதினமான வியாழக் கிழமை அந்த பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெறும் இல்ல விளையாட்டுப் போட்டிக்கு செல்கின்றனர் எனப் பெற்றோரிடம் தலா ஒவ்வொருவரும் 300 ரூபா பணத்தை பெற்றுக் கொண்டு அன்றைய தினம் வீட்டில் இருந்து வெளியேறியுள்ளனர்.

பாடசாலை சீருடையுடன் வீட்டில் இருந்து வெளியேறிய சிறுமிகள் அதனை கழற்றி வேறு ஆடைகளை அணிந்து கொண்டு அங்கிருந்து பஸ் ஏறி பாசிக்குடா சென்று கடலில் நீராடியிருக்கின்றனர். அங்கு நீராடிய சுங்காங்கேணியைச் சேர்ந்த 17 ,16 வயது இரு சிறுவர்களுக் கும் இரு சிறுமிகளுக்கும் இடையே காதல் ஏற்பட்டது.

இரவாகியதால் சிறுமிகள் வீடு செல்ல பஸ் இல்லாத காரணத்தால் தங்கள் வீட்டிற்கு வந்து தங்கிவிட்டு காலையில் போகுமாறு காதலர்கள் சிறுமிகளைக் கோரியதையடுத்து 4 சிறுமிகளும் காதலர் ஒருவரின் வீட்டிற்குச் சென்று தங்கியுள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இரு சிறுவர்களையும் வாழைச்சேனை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும், சிறுமிகள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

**நிலாவெளி வீதியை ...**

திருகோணமலை – இலுப்பைக்குளம் கிராமத்தில் புத்தசாசன அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட விகாரையின் நிர்மாணப் பணி நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று இந்த ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரத்துவத்தை குழப்புகின்ற ஆளுநரை அனுப்புவோம்', 'வரலாற்றுச் சான்றுகளைக் கிளறுகின்ற சம்பந்தன்', 'புத்தசாசன அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட விகாரையின் நிர்மாணப் பணியை நிறுத்த சம்பந்தன் யார்?' – போன்ற பதாதைகளை ஏந்தியவாறு பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிர்மாணிக்கப்படவிருக்கும் பௌத்த விகாரை காரணமாக இனமுறுகல் ஏற்படும் என திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவம்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் சமூக ஆர்வலர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இதனை தொடர்ந்து உத்தேச விகாரையின் பணிகள் ஆளுநரின் உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டன.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்னிசை விருந்து





சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த சிறப்பு நிகழ்வாக நேற்று வெள்ளிக்கிழமை இன்னிசை விருந்து இடம்பெற்றது.

இதன்போது து.மதுசிகனின் கச்சேரி இடம் பெற்றது. வயலின் – இ.நிறோஜன், மிருதங்கம் – நக்கீரன் கேதாரநாத் .

இதன்போது பாடல் இசைத்த து.மதுசிகனுக்கு சந்நிதியான் ஆச்சிரம சுவாமி கலாநிதி மோகன தாஸ் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

# மாணவர்களைத் தவறாகப் பயன்படுத்திய அதிபர் தொடர்பில் நடவடிக்கை அவசியம்

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் சுட்டிக்காட்டு

தனது தவறை மூடிமறைக்கும் நோக்கில், மாணவர்களைத் தவறான முறையில் பயன்படுத்தும் அதிபரின் செயற்பாடு தொடர்பாக வடமாகாண கல்வி திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கடந்த 07.08.2023 உயர் தர மாணவர்கள் சிலரை ஐந்து பாட வேளைகள் வெயிலில் வெளியே விட்டு தண்டனை வழங்கப்பட்டமைக்கு ஆசிரியர் ஒருவர் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அதிபரின் தனது தவறை மூடிமறைக்கும் நோக்கில் செயற்படுவதாக ஊடக அறிக்கையொன்றின் ஊடாக குற்றம்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் (11.08.2023) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

பாடசாலையின் சிசிடிவி தொகுப்புகள் உடனடியாக கண்காணிக்கப்பட்டு, அதிபரால் கூட்டம் போடப்பட்டு மாணவர்களும் ஏனையோரும் தவறாக வழிநடத்தப்பட்ட விடயங்கள் கண்டறியப்பட வேண்டும்.

சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருடன் இணைந்து பொலிஸாரும் விசாரணை நடத்தியுள்ளனர். இந்தநிலையில், முடிவுகள் கண்டறியப்பட முன்னர் விசாரணைகளைத் திசை திருப்பும் நோக்கில் மாணவர்களைத் தவறாக வழிநடத்தும் அதிபரின் செயற்பாடு குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிபரின் முறைகேடுகள் மற்றும் பாடசாலை சிற்றுண்டிச்சாலையை வேறு ஒருவரது பெயரில் தானே பெற்று, பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்தி வியாபாரம் செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் புகைப்பட ஆதாரங்களுடன் வட மாகாண கல்வி திணைக்கள விசாரணைக் குழுவுக்கு வழங்கியிருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதிபரின் முறைகேடுகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதாரங்களுடன் வழங்கிய விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இத்தகைய தவறானவர்களின் செயற்பாடுகள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

யூனியன் கல்லூரி விவகாரம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணையின் மூலம் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்பதை இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது.– என்றுள்ளது.

# சட்டவிரோத நடவடிக்கை; ஈரானியர் மூவருக்கு அபராதம் விதிப்பு!



இலங்கையில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் ஈரானிய பிரஜைகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நீதிமன்றம் ஒரு கோடி 32 லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

சிங்கராஜா வனப்பகுதியில் தாவர மற்றும் விலங்கு பாகங்களைச் சேகரித்து கொண்டிருந்த போது நெலுவ லங்காகம பிரதேசத்தில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் நெலுவ வன அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

குறித்த ஈரானிய பிரஜைகள் மூவருக்கும் உடுகம நீதிவான் நீதிமன்றம ஒரு கோடி 32 லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் தலா 44 லட்சம் ரூபா வீதம் அபராதம் விதித்து நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மீண்டும் பேரினவாதம் முருங்கையில்!

ஜனாதிபதிப் பதவியை விட்டு ஓடி, ஒரு வருடம் கழிந்த நிலையில், இதுவரை மௌனம் சாதித்து வந்த கோட்டாபய ராஜபக்ஷவை அவரது மௌனத்தைக் கலைக்குமாறு அவரது ஆதரவாளர்கள் அழுத்தம் கொடுக்கத் தொடங்கி இருக்கின்றார்கள்.

நாட்டின் ஒற்றையாட்சி முறைக்கு ஆபத்து விளைவிக்கும் விதத்தில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்பாட்டில் தீர்மானம் எடுத்து முன்நகர்கையில் கோட்டாபய ராஜபக்ஷ வெறுமனே பார்த்திருக்க முடியாது, பார்த்திருக்கக் கூடாது என்று கோட்டாபயவின் ஆதரவாளர்கள் பகிரங்க வெளியில் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

கோட்டாபயவின் நெருங்கிய ஆதரவாளரான அநுராதபுரம் மாவட்ட எம்.பி. பேராசிரியர் சன்ன ஜெயசுமன இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்

நாட்டின் 69 லட்சம் மக்கள் ஒன்று திரண்டு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆணை கொடுத்திருந்தார்கள், அந்த ஆணையின் மிச்சத்தைத்தான் ரணில் விக்கிரமசிங்க தொடர்கின்றார், அதை நாம் மறக்க கூடாது என சன்ன ஜெயசுமன கூறுகின்றார்.

நாட்டுக்கு புது அரசமைப்பு ஒன்றைத் தாம் ஏற்படுத்தித் தருவார் என்ற வாக்குறுதியின் பேரிலேயே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 லட்சம் மக்கள் திரண்டு வாக்களித்து ஆணை தந்தனர். ஆனால் அவரது அந்த ஆணையின் எஞ்சிய பதவிக் காலத்தை வகிப்பதற்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, ஒற்றையாட்சி முறைக்கு ஆப்பு வைக்கும் 13 ஆம் திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றார். இது அந்தப் பதவிக்கு மக்கள் தந்த ஆணைக்கு முற்றிலும் முரணானது. இந்தச் சமயத்தில், அந்த ஆணையை மக்களிடம் பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ இனிமேலும் மௌனம் காக்கக்கூடாது என்பது சன்ன ஜெயசுமனவின் வாதம்.

கோட்டாபயவுக்கு ஆதரவான பேராசிரியர் சன்ன ஜெயசுமன அணி நாடாளுமன்றத்தில் தனிக் குழுவாக இயங்குகிறது. பேராசிரியர் ஜி.எல்.பிரிஸ், டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் சரித்த ஹேரத் என பதிமூன்று எம்.பிக்கள் இந்த அணியில் உள்ளனர்.

இந்தச் சமயத்தில் கோட்டாபய ராஜபக்ஷ மௌனம் காப்பது நாட்டின் ஒற்றையாட்சிக்கு ஆபத்தை ஏற்படுத்தி விடும் என்று இந்த அணியினர் கூறுவது, 13க்கு எதிராக பௌத்த, சிங்களப் பேரினவாதக் கிளர்ச்சியை மேலும் தூண்டிவிடும் எத்தனம் என்பது துலாம்பரமானது.

13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதி ரணிலின் திட்டம் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றக் குழு வெளிப்படையான அறிக்கை ஒன்றை சபையில் வெளியிட்டு, தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டுமென்றும் அவர் கோருகின்றார்.

பேரினவாதம் மீண்டும் சந்நதம் கொள்ளத் தொடங்கி முருங்கை மரத்தில் ஏறிவிட்டதைக் குறிக்கும் கருத்தியல் வெளிப்பாடுதான் இது!

# கொழும்பு துறைமுகத்தில் சீன கப்பல் கண்காணித்து வருகின்றது இந்தியா

### இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு

இந்த வாரம் கொழும்பு துறைமுகத்துக்கு வந்த சீன கப்பலை இந்தியா கண்காணித்து வருகிறது இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார்.

வாராந்த செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

இது ஒரு போர்க் கப்பலா இல்லையா என்பது தெரியவில்லை. நாட்டின் பாதுகாப்பு நலன்களை பாதிக்கும் எந்தவொரு வளர்ச்சியையும் இந்தியா கவனமாக கண்காணிக்கிறது.

இந்தியா தனது பாதுகாப்பு நலன்களைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என கூறியுள்ளார்.

சீன போர்க்கப்பல் கடந்த 10ஆம் திகதியன்று கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த நிலையில் இன்று (12.08.2023) கொழும்பில் இருந்து புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சீனாவின் ஏவுகணை மற்றும் செயற்கைக் கோள் கண்காணிப்பு கப்பலான 'யுவான் வாங் 5' தென் இலங்கை துறைமுகமான அம்பாந்தோட்டைக்கு வந்தமை இந்தியாவிடம் இருந்து கடுமையான எதிர்வினைகளை எழுப்பியிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# தொடர் வறட்சி நிலையால் சிறுபோகச் செய்கை பாதிப்பு



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் வறட்சியான காலநிலை காரணமாக மாவட்டத்தில் சிறுபோக செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. குடிக்கத் தண்ணீர் இன்றி மேய்ச்சல் தரவை இன்றி கால்நடைகள் அலைந்து திரிகின்றன. கால்நடைகள் தண்ணீர் இன்றி இறக்கும் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகிறது.

கால்நடை வளர்ப்பாளர்கள், தோட்ட செய்கையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் வெப்பம் காணப்படுவதால் மன்னார் மாவட்டத்தில் நீர் நிலைகளில் நீரின் அளவு முழுமையாக குறைவடைந்துள்ளது.

அதே நேரம் சிறிய குளங்கள் கால்வாய்கள் முற்றாக வறண்டு போயுள்ளன.

குறிப்பாக கடந்த மாதம் மன்னார் மாந்தை பகுதியில் சிறுபோக பயிர் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் நெற் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. நெற்பயிர்கள் கருகியுள்ளன. கத்தரி, கச்சான் போன்ற செய்கைகளும் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன.

இன்னும் சில பகுதிகளில் வறட்சி காரணமாக கிணற்று நீரும் வற்றியுள்ளது.

# பட்மின்ரன் சுற்றுப் போட்டியில்
# கல்முனை ஸாஹிரா தேசிய மட்டத்துக்கு




**(நூருல் ஹுதா உமர்)**

திருகோணமலை மெகெய்ஸர் மைதானத்தில் கடந்த 7, 8 ,9 ஆம் திகதிகளில் நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பட்மின்ரன் சுற்றுப்போட்டி-2023 இல் கல்முனை கல்வி வலய கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை வீரர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

சிறப்பாக விளையாடி 18 வயதுக் குட்பட்ட பிரிவு சம்பியன் பட்டத்தை பெற்று கிழக்கு மாகாணத்தில் தமக்கான அடையாளத்தை மீண்டும் ஒரு தடவை நிருபித்துள்ளனர்.

போட்டியில் கலந்து கொண்டு சம்மியனாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும், அவர்களை பயிற்றுவித்து போட்டிக்காக அழைத்துச் சென்ற பொறுப்பாசிரியர்கள் அன்பு முகைதீன் அப்ராஜ் ரிலா மற்றும் எம்.எச்.எம். முஸ்தன்ஸிர் மற்றும் மாணவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை முதல்வர் எம்.ஐ.ஜாபீர் தெரிவித்தார்.

## பாடசாலைக்கு பொருள்கள் வழங்கல்

**(நூருல் ஹுதா உமர்)**

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அலுவலக பாவனைக்கு தேவையான காகிதாதிகள் மற்றும் மின்விசிறிகளை பாடசாலை அதிபர் எம்.ஐ. ஜாபீரிடம் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஏ.எம். ஜாஹீர் வழங்கியுள்ளார்.



## மூத்த கலைஞர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு



**(எம்.எப்.நவாஸ்)**

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவலகங்கள் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்படும் மூத்த கலைஞர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு முதன் முறையாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஏ.எம். ஜமால்டீன் என்பவருக்கு 2023 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்டது .

அதனை கௌரவிக்கும் முகமாக அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று (11) உதவி பிரதேச செயலாளர் தலைமையில் பாராட்டு பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் சமூதாய விழிப்புணர்வு மாநாடு



(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை ஹுதா அழைப்பு வழி காட்டல் பணியகம் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் குழுவினரின் ஏற்பாட்டில் சமூதாய விழிப்புணர்வு மாநாடு கடந்த வாரம் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலில் இடம் பெற்றது.

முக்கியமான 04 தலைப்புக்களை உள்ளடக்கியதாக நடந்த இந்த மாநாட்டில், கண்ணியமிக்க உலமாக்களான அஷ்ஷெய்க் அன்சார் (துப்லீகி) – வாரிசுரிமையும் அதனால் ஏற்படும் சமூக அநீதிகளும் எனும் தலைப்பிலும், அஷ்ஷெய்க் றிஸ்வான் (பிர்தௌஸி) – இஸ்லாமிய திருமணங்களும் அதில் இன்று நுழைந்துள்ள அனாச்சாரங்களும் எனும் தலைப்பிலும், அஷ்ஷெய்க் ஜே.எம்.ஸாபித் (ஸரயி, ரியாதி) – போதை வஸ்து வியாபாரமும் தத்தளிக்கும் மாணவச் செல்வங்களும் எனும் தலைப்பிலும், அஷ்ஷெய்க் ஏ.ஆர். அப்துல்லாஹ் (ஹாமி) – இஸ்லாமிய இளைஞர்களுக்கு ஒரு அறைகூவல் எனும் தலைப்பிலும் உரையாற்றினர்.

இங்கு ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபை, ஹுதா அழைப்பு வழி காட்டல் பணியகம் தஃவா குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் பெண்கள் கலந்து கொண்டனர்.



# கற்றல் உபகரணம், உணவுப் பொதி 30 மாணவர்களுக்கு வழங்கிவைப்பு





(வடிவேல் டினேஸ்)

பொருளாதார கஷ்டத்தை எதிர் கொள்ளும் மாணவர்களுக்கு நேற்று (11) உலர் உணவு பொதி மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

அக்கரைப்பற்று கோளாவில் பெருநாவலர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சுமார் 30 மாணவர்களுக்கு இவை நேற்று வழங்கப்பட்டன.

ஒரு மாணவனுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் என்ற ரீதியில் 30 மாணவர்களுக்கு பெறுமதியான உபகரணங்கள், உலர் உணவுப் பொதி என்பன வழங்கப்பட்டன.

சுவிஸ் மாநில இளம் மாணவர்களால் இவை வழங்கப்பட்டன.

# கிழக்கு மாகாண ஆளுநர் பங்களாதேஷ் தூதர் சந்திப்பு!



(கே. எ. ஹமீட்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கைக்கான பங்களாதேஷ் தூதர் தாரீக் எம்டி அரிஃபுல் இஸ்லாம் ஆகியோருக்கும் இடையில் நேற்று ஆளுநர் செயலகத்தில் நட்பு ரீதியான சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன்,நினைவு சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# தொலைத்தொடர்பு ஆணைக்குழுவுக்கு பதில் பணிப்பாளர் நேற்று நியமனம்

(அ.அஸ்வர்)

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகமாக மதுஷங்க திசாநாயக்கவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை (11) தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்த மதுஷங்க திசாநாயக்க, தகவல் கட்டமைப்பு தொடர்பில் அவுஸ்திரேலியாவின் மெல்பெர்ன் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றவராவார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான இவர், பாதுகாப்பு அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சு, நீதி அமைச்சு, இலங்கை நாடாளுமன்றம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ப பல அரச நிறுவனங்களின உயர் பதவிகளையும் வகித்துள்ளார்.



இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சட்ட முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ள இவர், குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதுளை - மஹியங்கனை வீதியில் சடலம் மீட்பு!

பதுளை – மஹியங்கனை பகுதியில் உள்ள வீதியில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

இன்று (12.08.2023) காலை சடலம் மீட்கப்பட்டது என்று கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுலுஓயா பகுதியை சேர்ந்த 28 வயதுடைய நந்தன குமார என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இறந்தவரின் தலையில் காயங்கள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காட்டு யானையின் தாக்குதலால் இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மரணம் எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சமாதான நீதிவானாக நியமனம்



பூனைந்தவத்த, கலால்பிடிய, உக்குவலையைச் சேர்ந்த இமாம்தீன் ராசித் அப்துல்லா முழுத் தீவுக்குமான சமாதான நீதிவானாக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மாத்தளை மாவட்ட நீதிபதி முன்னிலையில அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இமாம்தீன், நஜிமா உம்மா தம்பதியினரின் புதல்வரான இவர் சமூக சேவையாளராவார். நீதி அமைச்சில் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் பணியாற்றுகிறார்.

# சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு அட்டாளைச்சேனையில் கரபந்தாட்டச் சுற்று

(எம்.எப்.நவாஸ்)

சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இடம்பெறவுள்ளது.

அட்டாளைச்சேனைப் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் இம் மாதம் இன்றும் நாளையும் (12-13) அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இளைஞர் கழகங்களுக்கிடையில் சுற்றுப் போட்டி இடம்பெறவுள்ளது.

இதில் அட்டாளைச்சேனை இளைஞர் கழகங்களில் இருந்து 03 இளைஞர் கழகங்களும், அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழகங்களில் இருந்து 03 இளைஞர் கழகங்களும் பங்குபற்றவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமது ஷபீர் மற்றும் கௌரவ அதிதியாக அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹ்ஜா முஸாபிர் அவர்களும் கலந்து கொள்ள உள்ளனர் என இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம்.றியாத் தெரிவித்தார்.

# வீடுகளில் தேசியக் கொடியை ஏற்றி செல்பி எடுத்துப் பதிவேற்றுங்கள்!

## பிரதமர் மோடி நாட்டு மக்களுக்குக் கோரிக்கை



ஜம்மு,ஓக.12

காஷ்மீரில் 400 அடி நீளமுள்ள தேசிய கொடியுடன் பிரமாண்ட பேரணி நடைபெற்றது.

75 ஆவது ஆண்டு சுதந்திரதின நிறைவு விழாவையொட்டி கடந்த ஆண்டை போல இந்த ஆண்டும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி வீடுகள் தோறும் அனைவரும் தேசிய கொடி ஏற்ற வேண்டும் என பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.மேலும் வீடுகளில் ஏற்றப் பட்ட தேசிய கொடியுடன் "செல்பி" எடுத்து மத்திய அரசின் பிரத்தியேக இணைய தளத்தில் பதிவேற்ற பிரதமர் அறிவுறுத்தி யுள்ளார்.

இந்த நிலையில் மக்கள் வீடுகளில் தேசிய கொடி ஏற்றுவதை ஊக்குவிக்கும் விதமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் தேசிய கொடி பேரணி நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்று காஷ்மீ ரின் அனந்த்நாக் மாவட்டத்தில் 400 அடி நீளம் கொண்ட பிரமாண்ட தேசிய கொடியுடன் மக்கள் பேரணி சென்ற னர். இராணுவம் மற்றும் பொலிஸார் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பேரணியில் மாணவர்கள், கிராம மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்ட னர். இதேபோல் தலைநகர் டெல்லி யில் எம்.பி.க்கள் தேசிய கொடியுடன் மோட்டார் சைக்கிள்களில் பேரணி சென்றனர். அவர்களுடன் ஏராளமான பொதுமக்களும் பேரணியில் பங்கேற்ற னர். இந்த பேரணியை துணை ஜனாதி பதி ஜகதீப் தன்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மத்திய மந்திரிகள் ஜி கிஷன் ரெட்டி, அனுராக் தாக்கூர், பியூஷ் கோயல், மீனாட்சி லேகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பிரகதி மைதானத்தில் இருந்து தொடங்கிய பேரணி இந்தியா கேட் வட்டம் வழியாக மேஜர் தியான் சந்த் மைதானத்தில் முடிவடைந்தது.

முன்னதாகப் பேரணியைத் தொடக்கி வைத்து பேசிய ஜகதீப் தன்கர், "தேசிய கொடிக்கு மரியாதை அளிக்கும் நிகழ் வில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பது மறக்க முடியாத நிகழ்வு. மனிதகுலத்தில் ஆறில் ஒரு பங்கினர் வசிக்கும் பூமியின் மிகப்பெரிய ஜனநாய கம், முன்னெப்போதும் இல்லாத வகை யில் உயர்ந்து வருகிறது என்பதை உணர வைக்கும் ஒரு சந்தர்ப்பம் இது. நமது எழுச்சி தடுக்க முடியாதது" என கூறினார்.

# பெண் மீது கூட்டுப் பலாத்காரம் மணிப்பூரில் மகளிர் போராட்டம்

இம்பால்,ஓக.12

மணிப்பூரில் பெண் கூட்டுப் பலாத் காரம் செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மெய்தி இன பெண்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.

மணிப்பூரில் பழங்குடியின அந் தஸ்து விவகாரத்தில் மெய்தி மற்றும் குகி இன மக்களுக்கிடையே கடந்த மே மாதம் 3 ஆம் திகதி கலவரம் வெடித்தது. 3 மாதங்களைக் கடந்தும் கலவரம் இன்னும் ஓயவில்லை. இதனி டையே மணிப்பூரில் குகி பழங்குடி இனத்தை சேர்ந்த 2 பெண்களை நிர் வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்து சென்ற சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் எதிரொலித்ததோடு, இதை ஒட்டி மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் நம்பிக்கையில்லாப் பிரேரணையும் கொண்டுவரப்பட்டது.

இந்த பரபரப்பான சூழலில் மணிப் பூரில் மேலும் ஒரு பெண் கூட்டு பலாத் காரம் செய்யப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் தெரியவந்தது.

கடந்த மே மாதம் 3 ஆம் திகதி நடந்த கலவரத்தின்போது சூரச்சந் பூர் மாவட்டத்தை சேர்ந்த திருமண மான 37 வயது பெண்ணை 6 பேரை கொண்ட கும்பல் கூட்டு பலாத்காரம் செய்தது. பாதிக்கப்பட்ட அந்த பெண் கடந்த இரு தினங்களுக்கு முன்பு பொலி ஸில் புகார் அளித்த பிறகே இந்த கொடூர சம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது. இது மணிப்பூரில் மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

# திருப்பதி மலைப்பாதையில் சிறுத்தை தாக்கி சிறுமி சாவு

திருப்பதி, ஓக.12

திருப்பதி ஏழுமலையான் கோவி லுக்கு செல்லும் பக்தர்கள் அலிபிரி மற்றும் ஸ்ரீவாரி மெட்டு மலைப்பாதை யில் நடந்து சென்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர். பக்தர்கள் நடந்து செல்லும் அலிபிரி அடர்ந்த வனப்பகுதி என்பதால் வனவிலங்குகள் அடிக்கடி நடைபாதைக்கு வருகின்றன.

ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட் டம், போத்தி ரெட்டி பாலத்தை சேர்ந்தவர் தினேஷ் குமார். அவரது மனைவி சசி கலா. மகள் லக்ஷிதா (வயது 6). நேற்று இரவு திருப்பதி வந்தனர். இரவு 7.30 மணி அளவில் தினேஷ் குமார் மனைவி, மகளுடன் அலிபிரி நடைபாதையில் நடந்து சென்று கொண்டு இருந்தார். நடைபாதையில் கூட்டம் இல்லை. பெற் றோர் கைகளைப் பிடித்து வந்த சிறுமி அவர்களை விட்டு வேகமாகப் படியேறிச் சென்றார். நரசிம்ம சாமி கோவில் அருகே நடந்து சென்றபோது லக்ஷிதா திடீரெனக் காணாமல் போனார். சிறுமி காணாமல் போனதால் அவரது பெற் றோர் அதிர்ச்சி அடைந்தனர். நடை பாதையில் பக்தர்கள் கூட்டத்தில் மகளைத் தேடிப் பார்த்தனர். நீண்ட



நேரம் ஆகியும் மகளை காணாததால் பதற்றம் அடைந்த சிறுமியின் பெற் றோர் இதுகுறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். பொலிஸார் மற்றும் தேவஸ்தான கண்காணிப்புப் பொலிஸார் இரவு முழுவதும் வனப் பகுதியில் லக்ஷிதாவை தேடி வந்தனர். மலைப்பாதையில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். அப்போது சிறுமி தனது பெற்றோருக்கு முன்பாக தனியாக நடந்து செல்லும் காட்சிகள் பதிவாகி இருந்தன. மேலும் கூடுதல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு தேடினர். இன்று காலை 7 மணி அளவில் லக்ஷிதா நர சிம்மசாமிகோவில்அருகேஇரத்தக்காயங் களுடன் பிணமாக கிடந்தார். சிறுமி யின் உடல் அருகே சிறுத்தையின் எச்சம் கிடந்தது. இதனால் சிறுமியை சிறுத்தை இழுத்துச்சென்று அடித்துக் கொன் றுள்ளது தெரியவந்தது. சிறுமியின் பிணத்தை கண்ட அவரது பெற்றோர் கதறி துடித்தனர். சாமி தரிசிக்க வந்து மகளை இழந்து விட்டதாக அழுது புரண்ட சம்பவம் காண்போரைக் கண் கலங்கச் செய்தது.

பொலிஸார் சிறுமியின் பிணத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அங் குள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மலைப்பாதையில் பல முறை வனவிலங்குகள் தாக்கியதில் பக்தர்கள் காயம் மட்டும் அடைந்து வந்தனர். தற்போது முதல்முறையாக சிறுத்தை தாக்கியதில் சிறுமி பலியான சம்பவம் பக்தர்கள் மற்றும் பொதுமக்களி டையே கடும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

திருப்பதி மலை அமைந்துள்ள சேஷாசலம் வனப்பகுதியில் நூற்றுக் கும் மேற்பட்ட சிறுத்தைகள் உள்ளன. இதில் பத்துச் சிறுத்தைகள் பக்தர்கள் நடைபாதை வரை அடிக்கடி நடமாடுகின் றன. தேவஸ்தான அதிகாரிகள் பக் தர்கள் நடந்து செல்லும் நடைபாதையில் வனவிலங்குகள் வராதபடி இரும்பிலான தடுப்பு வேலிகள் அமைத்து பக்தர்களின் உயிருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.



# ஹவாயில் காட்டுத் தீயால் நகரமே சூறை
## 53 பேர் பலி; 1,000 பேரைக் காணோம்!

ஹானலுலூ,ஓக.12

ஹவாய் காட்டுத்தீயில் சிக்கி உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது. மவுயி தீவில் சுமார் 1,000 பேர் காணாமல் போயுள்ளனர்.

அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்தில் பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள ஹவாய் தீவுக் கூட்டங்களில் ஒன்றான மவுயி தீவில் பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. அங்கு அண்மையில் வீசிய சூறாவளிக் காற்று காரணமாக காட்டுத் தீயானது மவுயி தீவின் நகர்ப்பகுதிக்கும் பரவியது.

இந்தக் காட்டுத்தீயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது, சுமார் 1,000 பேர் காணாமல் போயுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கு கடற்கரையில் உள்ள சுற்றுலா நகரமான லஹைனா பெருமளவில் தீக்கிரையாகி உள்ளது. சுமார் 1,700 கட்டடங்கள் வரை தீயில் சேதமடைந்துள்ளன என அந்தத் தீவின் ஆளுநர் ஜோஷ் க்ரீன் தெரிவித்துள்ளார்.

அங்கிருந்த ஆயிரக்கணக்கான சுற்றுலாவிகள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பான பிற இடங்களுக்கு அவசரஆவசரமாக இடம்பெயரும் கட்டாயம் ஏற்பட்டது.

அமெரிக்காவின் தீவு மாகாணமான ஹவாயில் எட்டு தீவு நகரங்கள் இருக்கின்றன. இங்கு, இரண்டாவது பெரிய நகரமாக மவுஉள்ளது.

இங்கு, இரு தினங்களுக்கு முன் ஏற்பட்ட காட்டுத் தீ, மெல்ல மெல்ல நகர்ப்புற பகுதிகளுக்கும் பரவியது.

இதையடுத்து, அங்கிருந்த ஆயிரக்கணக்கானோர் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

திரும்பும் இடமெல்லாம் வானுயர எழுந்துள்ள கரும்புகையால், மவுய் நகரமே புகை மண்டலமாக மாறியுள்ளது.

சாலைகள், குடியிருப்புகள், முக்கிய கட்டடங்கள் என பல பகுதிகள் தீயில் கருகியதால், அந்நகரமே உருக்குலைந்துள்ளது.

தீயில் இருந்து தப்பிக்க நினைத்தவர்கள் பசிபிக் பெருங்கடலில் குதித்து தப்ப முயன்ற நிலையில், அதில் பலர் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகிறது. எனவே, உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

மவுயி நகரின் முக்கிய மருத்துவமனைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன. நகரின் பல்வேறு பகுதிகளில் பற்றி எரியும் தீயை அணைக்கும் பணியில் அமெரிக்காவின் விமானப் படையும் , கடலோர காவல் படையும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தரைவழியாகவும்தீயைக்கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல இடங்களில் மின்தடை ஏற்பட்டுள்ளதுடன், மொபைல் போன் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளதால், மவுயி நகரில் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

உலக அளவில் பருவ நிலையில் ஏற்பட்ட மாற்றம், அதீத வெப்பம், அதிக காற்று, குறைந்த ஈரப்பதம் மற்றும் உலர்ந்த தாவரங்கள் உள்ளிட்டவை காட்டுத் தீயின் பரவலுக்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றன.

தீ விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இரங்கல் தெரிவித்துஉள்ளார்.

அவர் சார்பில், வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் துரிதகதியில் மேற்கொள்ள உத்தர விடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

# தொடரும் பேய்மழையால் மியான்மரில் பெருவெள்ளம்



மியான்மரில் கடந்த 8 ஆண்டுகள் இல்லாத அளவிற்கு கனமழை. வீடுகளில் முதல் தளங்கள் வெள்ளத்தால் மூழ்கியதால் மக்கள் தத்தளிக்கின்றனர்.

மியான்மரில் பருவமழைக் காரணமாக கனமழை பெய்து வருகிறது. இந்த கனமழைக்கு ஐந்து பேர் பலியான நிலையில், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். மியான்மரில் ஒவ்வொரு வருடமும் பருவமழை காலத்தில் அதிக மழை பெய்வது வழக்கமானதுதான். இருந்தாலும், தற்போதைய அதிதீவிர வானிலை நிகழ்வுகள் பருவநிலை மாற்றத்தால் மோசமடைந்து வருவதாக விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர். யங்கோனின் வடகிழக்கு பகுதியான பாகோவில் கனமழையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் முன்னெச்சரிக்கை காரணமாக பலர் வெளியேறிய நிலையில், வெள்ளத்தில் அளவு அதிகரிக்க மீட்புப்படையினர் வீட்டில் இருந்த மக்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றினர். இரண்டு மாடி கொண்டு கட்டடங்களில் முதல் தளம் வெள்ளத்தால் மூழ்கின. இதனால் மக்கள் மொட்டை மாடியில் தஞ்சம் அடையும் நிலை ஏற்பட்டது. சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அங்குள்ள மடங்களில் தஞ்சம் அடைந்தனர். அவர்களுக்கு துறவிகள் உணவு அளித்தனர். கடந்த ஏழு எட்டு ஆண்டுகளில் பகோ பகுதியில் இது வரை இல்லாத அளவிற்கு அதிக கன மழை பெய்துள்ளதாக அங்கு வசிக்கும் 66 வயது முதியவர் தெரிவித்துள்ளார்.

# தமது மனைவியை சுட்டுக் கொன்ற நீதிபதியின் வீட்டில் 47 துப்பாக்கிகள்


வொஷிங்டன்,ஓக.12

கலிபோர்னியாவில் மனைவியைச் சுட்டுக் கொன்றவர் எனக் கூறப்படும் நீதிபதி வீட்டில் இருந்து 47 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா மாகாணம் ஒரேஞ்ச் நகர் நீதிபதி ஜெப்ரி பெர்குசன் (வயது 72). இவரது மனைவி ஷெர்லி பெர்குசன். இந்த தம்பதி அனஹிம் ஹில்ஸ் பகுதியில் உள்ள வீட்டில் வசித்து வந்தனர்.

நீதிபதி ஜெப்ரி பெர்குசன் தனது மனைவி ஷெர்லியை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார் எனக்கூறப்படுகிறது. இது தொடர்பாக ஜெப்ரியின் மகன் பொலிஸில் முறைப்பாடு அளித்தார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த பொலிஸார் நீதிபதி ஜெப்ரியை கைது செய்தனர்.

பின்னர், நீதிபதி வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் 47 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதே வேளை கைது செய்யப்பட்ட நீதிபதி ஜெப்ரி ஒரு மில்லியன் டொலர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949